சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 2/2015

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ம் நாள் DW4 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் திரு. செல்லப்பன் (பி.சா.3) நாள். .04.12 .2024
த/பெ. எத்திராஜ்
வயது 65
கிராமம் ஊனமலை

**<u>2 முதல் 4 பிரதிவாதி சாட்சி 4 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் வழக்கில் மூன்றாம் தரப்பிரன் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. தாவா சொத்து என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சிறு நாகலூர் மற்றும் ஊனமலையில் உள்ளது. வழக்கு எத்தனை இன சொதுக்களுக்கு, எந்த புல எண்களுக்கு, எத்தனை விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்று எனக்கு தெரியும். சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். ராஜம்மாள், பக்கரிசாமிக்கு உயில் எழுதிவைத்ததாக சொல்வதற்கு எந்த தேதியில் எந்த சொத்துக்களை எழுதி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. உயில் எழுதும்போது நான் உடன் இல்லை என்று சொன்னால் சரிதான். உயில் பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ஊரில் பேசிக் கொண்டார். பக்கிரிசாமி 5 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த

செட்டில்மென்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் அதுபற்றி எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தில் பக்கரிசாமிக்கு ராஜம்மாள் எழுதி கொடுத்த ஆவணம் பற்றி சொல்லப்பட்டள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவதுபோல் உயில் ஏதும் கிடையாது என்று சொன்னாலும், அதனால்தான் அந்த செட்டில்மென்ட் ஆவணத்தில் உயில் பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதியின் எதிர்கட்சி ஏதும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.